DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.72/2024

PW - 11

| | | |
|---|---|---|
| Name | : | சிவசங்கரன் (Lw - 11) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1** முதல் **5** எதிரிகள் ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 13.07.2026**

நான் தற்போது சேலம் மாவட்டம், சேலம் நகரம், இரும்பாலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2021 முதல் 2022ம் ஆண்டு வரை பேளுக்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

கடந்த 28.06.2021ம் தேதி பேளுக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணியன் என்பவர் பொறுப்பு அலுவலில் இருந்தபோது ஏற்கனவே இராசிபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற வாதி லட்சுமி என்பவரின் அடிதடி தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வாதி லட்சுமி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.285/2021 இதச. பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 354(B) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு.சரவணன் அவர்களின் பார்வைக்கு வைத்தார்.

காவல் ஆய்வாளர் திரு.சரவணன் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 28.06.2021ம் தேதி மாலை 17.30 மணிக்கு

சிங்களாந்தபுரத்தில் உள்ள மேற்கு தெருவில் உள்ள லட்சுமி என்பவரின் வீட்டிற்கு முன்பு சென்று சாட்சிகள் ராணி மற்றும் நிவேதா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பின்பு சாட்சிகள் லட்சுமி, சாந்தி, சுமதி, விஜயா, செல்வராஜ், நிவேதா மற்றும் ராணி ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்னர் வழக்கின் மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை எனது பார்வைக்கு வைத்தார். பின்னர் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் கடந்த 14.10.2021ம் தேதி எதிரிகள் ரமேஷ், சுரேஷ் ஆகியோர்ரை சிங்களாந்தபுரம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் மற்ற எதிரிகள் நாமக்கல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்கள் இவ்வழக்கில் கைது செய்யப்படவில்லை. பின்னர் இவ்வழக்கில் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.ஆனந்த் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். பின்னர் விசாரணையில் எதிரிகள் வாதி லட்சுமியின் உடைகளை பிடித்து இழுக்கவில்லை என்று தெரிந்ததால் இவ்வழக்கின் இதச. பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 354(B) என்பதிலிருந்து இதச. பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 354 ஆக சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் முதலில் புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.சரவணனை சாட்சியாக சேர்த்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச. பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 354-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் 1வது எதிரியை அ.சா.1 லட்சுமி அவரது அக்கா விஜயா, அவரது கணவர் செல்வராஜ் ஆகியோர் அடித்துவிட்டதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகளை நான் மறு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகளிடம் இருந்து ஆயுதங்களை எதையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை

என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி மற்றும் கம்பி ஆகியவற்றை வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் காண்பித்து அதன் மூலம் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என விசாரித்தேனா என்றால் இல்லை. மருத்துவர் விபத்து பதிவேட்டில் மேற்படி ஆயுதங்கள் குறித்து குறிப்பிட்டு கூறி இருந்ததால் விசாரிக்கவில்லை. விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள ஆயுதங்களால் வாதிக்கு ஏற்பட்ட காயங்களை ஏற்படுத்த முடியுமா என்று மருத்துவரிடம் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

அ.சா.1-ன் இரத்தம் படிந்த உடைகள் எதையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கும் எதிரிகளுக்குமான வீட்டு மூலபத்திரத்தை கைப்பற்றி மேற்படி வீடானது யாருக்கு சொந்தமானது என தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி மூலபத்திரத்தின் நகலை கைப்பற்றி நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எனக்கு முன் இவ்வழக்கில் புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.சரவணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அவரை சாட்சியாக சேர்த்துள்ளேன். இவ்வழக்கில் எதிரிகள் அ.சா.1 ஐ அடிக்கவில்லை என்றாலும், அ.சா.1 மற்றும் அவரது அக்கா விஜயா மற்றும் அவரது கணவர் செல்வராஜ் ஆகியோர் எதிரிகளை அடித்துவிட்டு அதில் இருந்து தப்பிபதற்காக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**